தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 362/ந/2023
நாள் 03.01.2024

திருமதி.R. சரஸ்வதி,
அம்பாசமுத்திரம்,
திருநெல்வேலி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
அம்பாசமுத்திரம் நகராட்சி,
திருநெல்வேலி மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், கம்மாளர் நடுத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. R. சரஸ்வதி என்பவரின் 20.11.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.11.2023 அன்று பெறப்பட்டு 362/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், கம்மாளர் நடுத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. R. சரஸ்வதி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான் அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட மேலே கண்ட முகவரியில் நிரந்தரமாக குடியிருந்து வருகிறேன். நானும் எனது கணவரும் 60 வயதை கடந்த முதியவர்கள் ஆவோம்.

சர்வே எண்.759/12 கொண்ட வீட்டில் நாங்கள் பல வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருகிறோம். மேலும் எனது கணவரின் வகையறாக்கள் பல தலைமுறைகளாக குடியிருந்து வந்துள்ளார்கள். கூடவே எங்கள் வீட்டிற்கு மேல்புறம் எங்கள் குலதெய்வக் கோவிலும் (பேய்க் கோவில்) அதைச் சுற்றி உள்ள காலியிடங்களும் உள்ளது. அதையும் பல தலைமுறைகளாக வழிபாடு செய்தும், அனுபவித்தும் வந்து கொண்டிருக்கிறோம்.

மேலும் எங்கள் வீட்டிற்கு மேல்புறம் உள்ள மனைவீட்டின் முன்சுவான்தாரரான மீனாட்சி மூப்பனார் ஜெயா என்பவருக்கு 2007–ல் எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணத்திலும்,

மேற்படி ஜெயா, சாந்தி என்பவருக்கு 2012–ல் எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரத்திலும் 1 லக்க மனை வீட்டுக்கும் கிழக்கு, சாமி ஆசாரி வகையரா வீட்டுமனைக்கு வடக்கு, கம்மாளர் நடுத்தெருவிற்கும் மேற்கு, மகாலிங்கம் ஆசாரி வீட்டு மனைக்கும் தெற்கு என எல்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், எங்கள் மனைக்கு தெற்கே உள்ள சர்வே எண்.760/1 கொண்ட மனைவீட்டின் உரிமையாளர் அண்ணாமலை மூப்பனார் எங்களுக்கு எதிராக தொடர்ந்த வழக்கிலும் மகாலிங்கம் ஆசாரி மனைவீட்டிற்கு தெற்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதிவுத்துறை சம்பந்தமான அனைத்து ஆவணங்களிலும் எங்கள் நிலம் தான் என்று உறுதியாக உள்ளது.

இந்நிலையில் சில நாட்களுக்கு முன் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பை கொடுப்பதற்காக அம்பை நகராட்சியில் இருந்து குடிநீர் குழாயை பதிக்கத் தொடங்கினர்.

எங்கள் வீட்டிற்கு மேல்புறம் உள்ள சாந்தி என்பவர் தனது கணவர் அம்பை நகராட்சியில் சுகாதார ஆய்வாளராக பணிபுரிவதை பயன்படுத்திக் கொண்டு, தீபாவளி என்பதால் சென்னையில் உள்ள எனது மகன் வீட்டிற்கு சென்றிருந்த சமயத்தில் எங்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தின் வழியாக அவரது காலிமனைக்கு குடிநீர் இணைப்பை பெறுவதற்காக குழாய்களை பதித்துள்ளார்.

நாங்கள் ஊரில் இருந்து வந்து பார்த்து அதிர்ச்சியாகி, அவரிடம் கேட்டதற்கு எங்களை அவமரியாதையாக பேசினார். உடனே நாங்கள் இதுகுறித்து அம்பை நகராட்சியில் மனு செய்துள்ளோம். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆகவே ஐயா, கீழ்க்கண்ட எங்கள் தரப்பு காரணங்களை பரிசீலனை செய்து எங்கள் மனுவின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

- மேற்படி சாந்தி வீட்டுமனைக்கு குடிநீர் இணைப்பை இழுக்கவில்லை. அவரது காலிமனைக்கு குடிநீர் இணைப்பை இழுத்துள்ளார். ஏற்கனவே அவரது வீட்டிற்கு புதிய குடிநீர் இணைப்பை இழுத்துள்ளார்.
- அவருக்கு கம்மாளர் மேலத்தெருவில் பாதைகளே இல்லை. பாதையில்லாத இடத்தில் எப்படி குடிநீர் இணைப்பை ஏற்படுத்த இயலும்.
- எங்களுக்கு பாத்தியப்பட்ட, நாங்கள் வழிபாடு செய்து வரும் கோவிலின் வழியாக குடிநீர் இணைப்பை கொண்டு செல்ல வழிசெய்துள்ளார்.
- மேற்படி சாந்தி என்பவரின் சட்டவிரோத செயல்களுக்கு அம்பை நகராட்சி துணை போகிறது'' என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 28.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையாளர் தனது அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"அம்பாசமுத்திரம் நகராட்சியில் திருமதி.சி.சாந்தி, கம்மாளர் நடுத்தெரு என்பவருக்கு AMRUT 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கப்படவுள்ள குடிநீர் இணைப்பினை மனுதாரர் திருமதி. சரஸ்வதி அவர்கள் இடத்தின் வழியாக பதிக்காமல் ஏற்கனவே திருமதி.சி.சாந்தி என்பவரின் பழைய குடிநீர் இணைப்பு செல்லும் அதே பாதையில் குடிநீர் இணைப்பு பதிக்க AMRUT 2.0 திட்டம் செயல்படுத்தும் ஒப்பந்ததாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**(3) மனுதாரரும் மற்றும் அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையரும் 18.12.2023 அன்று தென்காசி மாவட்டம், குற்றாலம் சர்க்யூட் ஹவுஸில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.12.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**(4) மனுதாரர் திருமதி.R. சரஸ்வதி 18.12.2023 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை. எதிர்மனுதாரரான அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையர் சார்பாக நகரமைப்பு ஆய்வாளராகப் பணியாற்றும் திரு. ஒ அ ஷேக் அப்துல் காதர் என்பவர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் கம்மாளர் தெருவில், தான் வசிக்கும் இடத்திற்கு வெளியே தெருவில் ஆக்கிரமிப்பு செய்து கதவு அமைத்துள்ளனர். மேற்கண்ட மனுதாருக்கு சொந்தமான இடத்தில் நகராட்சி எவ்வித குடிநீர் குழாயும் பதிக்கவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அம்ருத் திட்டத்தின் மூலம் அவர்கள் வசிக்கும் தெருவின் நடுவே குழாய்கள் பதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையரின் கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**(5) மீண்டும் ஒரு வாய்ப்பளித்து மனுதாரர் திருமதி.R. சரஸ்வதி என்பவரை 28.12.2023 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.12.2023 தேதியிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.**

**(6) மனுதாரர் திருமதி.R. சரஸ்வதி என்பவரின் சார்பாக அவரது மருமகள் திருமதி. M. காயத்ரி என்பவர் 28.12.2023 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.759/12 கொண்ட எங்களது வீட்டில் பல வருடங்களுக்கு மேலாக எனது மாமியார் மற்றும் குடும்பத்தினர் குடியிருந்து வருகிறார்கள். மேலும் எனது மாமனாரின் வகையறாக்கள் பல தலைமுறைகளாக குடியிருந்து வருகிறார்கள். கூடவே எங்கள் வீட்டிற்கு மேல்புறம் எங்கள் குலதெய்வக் கோவிலும் அதைச் சுற்றி காலியிடங்களும் உள்ளது. அதையும் பலதலைமுறைகளாக வழிபாடு செய்தும், அனுபவித்தும்

வந்துக் கொண்டிருக்கிறோம். அம்பாசமுத்திரம் நகராட்சியின் மூலம் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு அளிப்பதற்காக நகராட்சியினர் குடிநீர் குழாயை பதிக்கத் துவங்கினர். எங்கள் வீட்டிற்கு மேற்புறத்தில் உள்ள சாந்தி என்பவர் நாங்கள் ஊரில் இல்லாத சமயத்தில் எங்களுக்கு சொந்தமான இடத்தின் வழியாக தங்களுக்கு குடிநீர் இணைப்பு பெறவேண்டி குழாய்களை பதித்துள்ளார். ஏற்கனவே குடிநீர் குழாய் இணைப்பு பெற்றுள்ள அவர், எங்களது தெரு மற்றும் எங்களுக்கு சொந்தமான இடத்தின் வழியாக மற்றொரு இணைப்பு பெற்றுள்ளார். மேற்கண்ட சாந்தி என்பவரின் வீட்டிற்கான பாதை நாங்கள் வசிக்கும் கம்மாளர் மேலத் தெருவில் இல்லை. மேற்கண்ட திருமதி சாந்தி என்பவரது கணவர் அம்பை நகராட்சியில் சுகாதார ஆய்வாளராக பணிபுரிவதை பயன்படுத்தி எங்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தின் வழியாக மேற்கண்ட குடிநீர் குழாய்களை பதித்துள்ளார். இதுகுறித்து அம்பாசமுத்திரம் நகராட்சியில் புகார் அளித்தும் நகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே மேற்கண்ட எனது புகாரின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும், குறுக்கு வழியில் திருமதி சாந்தி என்பரால் பெறப்பட்ட இணைப்பை அம்பாசமுத்திரம் நகராட்சி இரத்து செய்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**(7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மன்னார்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

அம்பாசமுத்திரம் நகராட்சியினரால் அடல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டமான அம்ருத் 2.0 (Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0 – AMRUT ) திட்டத்தின் கீழ் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள புறம்போக்கு வகைப்பாட்டில் வார்டு எண்.6–ல் கம்மாளர் நடுத் தெருவில் அமைந்துள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்காக நகராட்சியினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் கதவு எண்.42, கம்மாளர் நடுத் தெருவில் அமைந்துள்ள திருமதி. சாந்தி என்பவரது வீட்டிற்கு ஏற்கனவே பழைய குடிநீர் இணைப்பு செல்லும் அதே பாதையில் அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் குடிநீர் இணைப்பு பதிக்க ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும், மேற்படி மனுதாரரான திருமதி. சரஸ்வதி என்பவருக்கு சொந்தமான இடத்தின் வழியாக எவ்வித குடிநீர் இணைப்பும் பதிக்கப்படவில்லை என்பதும் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் வாயிலாக தெரியவருகிறது. இதனை உறுதி செய்யும் வகையில் குடிநீர் இணைப்புக்கான வரைபடத்தையும் நகராட்சி ஆணையர் சமர்ப்பித்துள்ளார்.

இந்நிலையில் மனுதாரரும் தனது புகாரினை நிரூபிக்கும் வகையில் போதிய ஆதார ஆவணங்கள் சமர்ப்பிக்காத காரணத்தாலும் அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையாளரின் அறிக்கையை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மனுதாரரின் நிலத்தின் வழியே அவரின் அனுமதியின்றி குழாய்களைப் பதிக்கக்கூடாது எனவும், அரசு விதிகளின்படியே நகராட்சி நடந்திட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது. இதற்குரிய அறிக்கையில் நகராட்சி ஆணையர் எந்தவித விளக்கமும் அளிக்காமல் சம்பந்தமில்லாத பதில் அளித்திருப்பது கண்டனத்திற்குரியது. இதுபோன்ற அரைவேக்காட்டுத் தனமான பதில் இவரின் பதவிக்கு அழகில்லை என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்டுகிறது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி. R. சரஸ்வதி,
45/53, கம்மாளர் நடுத்தெரு,
அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம்.

2) ஆணையாளர்,
அம்பாசமுத்திரம் நகராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்
04/01/24